**செய்தி வெளியீடு எண் : 1403** **நாள் : 15.07.2023**

**செய்தி வெளியீடு**

மாண்பமை தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதியரசர் திரு.எஸ்.பாஸ்கரன் அவர்களின் முயற்சியினால் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் மற்றும் சென்னை வி.ஐ.டி., இணைந்து 'சர்வதேச இளைஞர் திறன் தினம்' மற்றும் 'சர்வதேச நீதி நாள்' இவ்வாணையத்தின் அரங்கத்தில் இன்று (15.07.2023) கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் புலனாய்வு பிரிவின் காவல்துறை தலைவர், டாக்டர் மகேந்திரகுமார் ரதோட், இ.கா.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்பமை தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதியரசர் திரு.எஸ்.பாஸ்கரன் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று துவக்கவுரையும், சென்னை வி.ஐ.டி. இணை பேராசிரியர் டாக்டர் என்.கோபிநாதன் அவர்கள் அறிமுக உரையும் ஆற்றினார்கள்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முதன்மை நீதியரசர் திரு.எம்.சுந்தர், அவர்கள் விருந்தினராக கலந்துகொண்டு விழாப் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் திரு.வி.கண்ணதாசன் அவர்கள் இவ்விழாவில் முன்னிலையேற்று சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் திரு.வி.மணிகண்டன் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டார்.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணைய பதிவாளர் (சட்டம்)/ மாவட்ட நீதிபதி திரு.என்.முரளிதரன் நன்றி கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in